**செ. கு. எண்: 141** **நாள்:13.06.2013**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 13.6.2013

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், செய்களத்தூர், பனிக்கனேந்தல் கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்லப்பாண்டி என்பவரின் மகன் சிறுவன் திருமுருகன், திரு. வீரபாண்டி என்பவரின் மகள் சிறுமி ஆனந்தவள்ளி ஆகிய இருவரும் 22.5.2013 அன்று ஆதனூர் கிராமம், ஆதனூர் தடுப்பணை அருகே தோண்டப்பட்டிருந்த நீர் நிரம்பிய பள்ளத்தில் குளித்துக் கொண்டிருந்த போது, நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், கோட்டைக்காடு கிராமம், கிழக்கு கடற்கரைச் சாலை அருகே 25.5.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது தீயணைப்பு வாகனம் மோதியதில், சென்னை ராயபுரத்தைச் சேர்ந்த திரு. இப்ராஹிம் என்பவரின் மகன் முகமது ஆசிப் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், வெட்டூர்மணிமடம் அருகே 26.5.2013 அன்று ஜீப் மீது அரசுப் பேருந்து மோதியதில், ஜீப்பை ஓட்டிச் சென்ற அகஸ்தீஸ்வரம் வட்டம், நீண்டகரை கிராமத்தைச் சேர்ந்த குருசு முத்து என்பவரின் மகன் ஆண்டனி அனீஷ் சம்பவ இடத்திலும், ஜீப்பில் பயணம் செய்த கல்குளம் வட்டம், கோதநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜெயகுமார் என்பவரின் மகன் சஜு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 1.6.2013 அன்றும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், திம்மராயசமுத்திரம் கிராமம் அருகே 27.5.2013 அன்று சமயபுரம் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து மாம்பழச் சாலை சிக்னல் அருகே நிலைதடுமாறி இரு சக்கர வாகனத்தின் மீது மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த வாசுதேவன் என்பவர் சம்பவ இடத்திலும், சிக்னல் அருகே நின்று கொண்டிருந்த சண்முகம் என்பவர் பலத்த

காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிசிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், செறுகோல் சாலை அருகே 28.5.2013 அன்று இரு சக்கர வாகனத்தின் மீது அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்க வாகனத்தில் பயணம் செய்த ஆற்றூர் கிராமம், மணிமந்திரத்துவிளை கல்லுபாலத்தைச் சேர்ந்த திருமதி ரோஸ்மேரி என்பவர் சம்பவ சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், முடிச்சூர் ரோடு, கிருஷ்ணா நகர் அருகே 28.5.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த முடிச்சூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜோசப் வின்செண்ட் பால் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாமக்கல் மாவட்டம், ராஜாகவுண்டன்பாளையம், திருச்செங்கோடு - ஈரோடு சாலையில் 31.5.2013 அன்று கார் மீது அரசுப் பேருந்து மோதியதில் காரில் பயணம் செய்த திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், மேல்பாய்ச்சார் கிராமத்தைச் சேர்ந்த திரு. நாராயணன் என்பவரின் மகன் விக்னேஷ் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 1.6.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

நீரில் மூழ்கி உயிரிழந்த சிறுவன் திருமுருகன் மற்றும் சிறுமி ஆனந்தவள்ளி; சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த முகமது ஆசிப், ஆண்டனி அனீஷ், சஜு, வாசுதேவன், சண்முகம், ரோஸ்மேரி, ஜோசப் வின்செண்ட் பால் மற்றும் விக்னேஷ் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்துகளில் உயிரிழந்த சிறுவன் திருமுருகன், சிறுமி ஆனந்தவள்ளி, முகமது ஆசிப், ஆண்டனி அனீஷ், சஜு, வாசுதேவன், சண்முகம், ரோஸ்மேரி, ஜோசப் வின்சென்ட் பால் மற்றும் விக்னேஷ் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**